**ஏறாவூர்பற்று பிரதேச சபை**

**மட்டக்களப்பு மாவட்டம்**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசோட்டத்தினையும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 பெறவேண்டிய கணக்குகள்

இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 07 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 821,070 ஆனது 3 தொடக்கம் 14 வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.2 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
| --- | --- |
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் என்பன நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான காரணங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 இன் 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய பெறுகை வழிகாட்டியின் பிற்சேர்க்கை 19இ பிரிவு 9.3 | ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகனத்திருத்த செலவுக்காக அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வாகனத்திருத்தத்திற்காக ரூபா 347,500 தொகை அமைச்சு செயலாளரின் அனுமதியின்றி செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல. 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங் கடந்த வைப்புக்கள் ரூபா 4,063,644 தொடர்பாக நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 30,764,081 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 16,949,222 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 13,814,859 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன

(அ) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூபா) | உள்ளபடியான வருமானம் (ரூபா) | 2015 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| வாடகைகள் | 4,853,184 | 6,065,090 | 3,422,122 |
| உரிமைக்கட்டணங்கள் | 1,705,250 | 1,705,250 | 103,700 |
| களியாட்டவரி | 365,797 | 103,902 | 671,282 |

#### 2.2.2 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான உரிமம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 14 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு கட்டணம் அறவிடமுடியாமையால் சபையானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அண்ணளவாக ரூபா 177,000 வருமானத்தை இழந்துள்ளது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

---------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீதவரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாததினால் பிரதேச சபையின் பிரதான வருமான மூலமான இவ்வரிகளின் மூலம் கிடைக்க வேண்டிய அண்ணளவாக ரூபா 430,000 தொகையை சபை வருடாந்தம் இழந்து வருகின்றது.

2.2.4 வாடகை வருமானம்

-------------------------

05 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையாக உள்ள கடை வாடகை, இறைச்சிக்கடை வாடகை மற்றும் சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா 3,334,854 தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 30% தொடக்கம் 105% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) வருமான முகாமைத்துவம்.

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு